**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு; நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்”

(எபேசியர்: 2:10)

படைப்பு வேதனையில் குமுறுகிறது. படைப்பு குணமடையவேண்டும். இதற்காக ஃப்ளோரிடா, ஓர்லண்டோவில் இருக்கும் இம்மனிதர், மார்ச் 19 ஆம் தேதி நாம் கொண்டாடிய புனித யோசேப்பைப் போல ஆரவாரமில்லாமல் தம்முடையப் பங்கை ஆற்றுகிறார். இதில் நம் பங்கு என்ன? இந்த வாரத்தை மகிழ்ச்சியின் வாரம் என்று நாம் கொண்டாடுகிறோம். இன்று நாம் மகிழ்ந்து களிகூரவும், நற்செய்தியில் இளைப்பாறவும் திருஅவை நம்மை அழைக்கின்றது. ஏனென்றால் “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்”

இன்றைய முதல் வாசகம் குறிப்பேடு புத்தகத்தில் கடவுளின் கோபம் அவரின் இரக்கத்தோடு இணைந்து வருகிறது. நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேல் மக்கள், கடவுள் அவர்களை நிராகரித்ததை உணர்கிறார்கள். ஆனால் சைரஸ் மன்னன் மூலமாக அவர்களை விடுவிக்க இரக்கம் நிறைந்த தந்தை ஏற்கெனவே திட்டமிட்டுள்ளார்,

கடந்த காலத்திலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம். திருப்பாடல் ஆசிரியர் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட சமூகத்தின் அழுகுரலைப் பற்றிப் பேசுகிறார். அழுவதாலும், புலம்புவதாலும் யாருக்கும் எந்தப் பலனுமில்லை. கண்ணுக்குத் தெரியாத அழிக்கும் வைரஸ் நம்மிடைய உள்ளது. நாம் வாழும் முறை மாற்றமடைந்திருந்தாலும் அதை சிறப்பாக வாழ, காணொளியில் நாம் காணும் அந்த மனிதரைப் போல நாம் சிறப்பான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

நமது நம்பிக்கையின் காரணமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம். உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள் என்று இயேசு நிக்கேதெமிடம் விளக்குகிறார். கிறிஸ்துவின் ஒளியில் இளைப்பாற வேண்டுமென்றால் நாம் பாவம் என்னும் இருளிலிருந்து வெளியேறவேண்டும். தம்முடைய வாழ்க்கையை சமுதாயத்திற்காக அர்ப்பணித்த காணொளியில் கண்ட மனிதரைப் போலவும், கடின உழைப்பும், துணிவும் கொண்ட புனித யோசேப்பின் அடிச்சுவட்டையும் பின்பற்றுவோம். ✜

**இன்றைய வாசகங்கள்:**

2 குறிப்பேடு: 36: 14-16,19-23

திருபாடல்: 137: 1-5

எபேசியர்: 2: 4-10

யோவான்: 8: 14-21

INTERNAL CIRCULATION ONLY
BUL 11/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

14 மார்ச் 2021

# Newtec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் 4 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:
**சமத்துவத்தைத் தொடக்கி வைத்தல்**

# எதிர்நோக்கு, நம்பிக்கை, வாழ்தல் மற்றும் தம்மையே அளித்தல்

ஒரு காணொளியில் ஒரு மனிதர் தனக்குத் தேவையான உணவுப்பொருட்களை 100 விழுக்காடு அவரே விளைவித்துக்கொள்கிறார். அவருக்கென்று சொந்தமாக நிலம் இல்லை. ஆனால் அண்டைவீட்டாரின் நிலத்தைப் பயன்படுத்துகிறார். ஏராளமான அறுவடையின் பலன் அந்த சமூகத்தில் உள்ள பலரையும் சென்றடைகிறது. அம்மனிதர் தனது உணவிற்காக பல்பொருள் அங்காடிக்கோ, மளிகைக்கடைக்கோ சென்றதில்லை. அவருக்குத் தேவையான அனைத்துமே அவர் வீட்டில் வளர்க்கப்பட்டவை. இதைபோலவே மற்றவர்களும் செய்ய அனுமதி அளித்துள்ளார். நம்பிக்கைக் கொள்ளவும், வாழ்ந்து தம்மையே அளிக்கவும் இம்மனிதர் எதிர்நோக்கை நமக்குக் கற்றுத்தருகிறார்.

Image: ©123rf.com